**DE–07/2025/003** (Page : 1)

## DEPARTMENTAL TESTS — JULY, 2025

## SECOND CLASS LANGUAGE TEST IN MALAYALAM

### [Translation from Tamil to Malayalam]

[Time : 45 minutes

(Maximum marks : 100)

1. மலையாளத்தில் மொழி பெயர்க்கவும் :

குழந்தைத்தொழிலாளர் பிரச்சனை என்பது உலகளாவியது. உலகெங்கிலும் பத்து கோடி குழந்தைகளாவது வேலை செய்கிறார்கள் என்பது கணக்கு. இந்தியாவில், குழந்தைத்தொழிலாளர்கள் வேலை செய்வதில் ஐம்பது சதவிகிதம் கேரளாவிலாகும். உணவகங்கள், பணிமனைகள், மீன் சேகரிப்புக் கிடங்குகள், கட்டிட வேலைகள் செய்யும் இடங்கள், வழியோரவாணிபம், பாறைமடைகள், செங்கல் சூளைகள், அச்சகங்கள், தையலகம் போன்ற எல்லா இடங்களிலும் குழந்தைத் தொழிலாளர்களைக் காணமுடிகிறது. குழந்தைத் தொழிலாளர்களை நியமனம் செய்கின்றவர்கள் பிற மாநிலங்களில் உள்ளவர்கள் ஆவர். குழந்தைத் தொழிலாளர்களால் ஏற்படும் சமூக விபத்தை சரியாக புரிந்துக்கொண்டவர்கள் அரசியலமைப்பின் சிற்பிகள். குறிப்பாக டாக்டர். அம்பேத்கார் அதனால் தான் குழந்தைகளைக்கொண்டு வேலை செய்ய வைப்பது முறைகேடாகவும், தீமையாகவும் கருதி அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகளைக் கூறும் இடங்களில் சேர்த்தெழுதி குழந்தைத்தொழிலை தடைசெய்தனர். பதினான்கு வயதிற்கு கீழேயுள்ள ஒரு குழந்தையும் தொழிற்சாலைகளிலோ, சுரங்கங்களிலோ விபத்து நிகழக்கூடியச் சூழலுள்ள தொழில் இடங்களிலோ நியமிக்கக்கூடாது என்று தடைச்சட்டம் உள்ளது. அரசியலமைப்புச்சட்டம் இருபத்தினான்காம் பிரிவில் இந்த தடைச்சட்டம் உள்ளது என்பதை அறியவும். அரசியலமைப்புச் சட்டத்தின் கண்ணியத்தை உணர்ந்துக்கொண்டு உருவாக்கிய நமது தொழிற்சட்டங்கள் எல்லாம் குழந்தைகளைக்கொண்டு வேலை செய்வதை தடை செய்திருக்கின்றது. தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை 1948 ல் தொழிற்சாலைச்சட்டம் பிரிவு 67ல், பதினான்கு வயதாகாத குழந்தைகளை வேலைக்கு எடுப்பதும், வேலை செய்யவைப்பதும், சட்டப்படி தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

பதினாலு வயதிற்கு மேலுள்ள, பருவமடையாத குழந்தைகளைக் கொண்டு வேலை செய்ய வைக்க வேண்டுமெனில், எந்தவேலையை அவர் செய்யப்போகிறார்கள் என்பதையும், அந்த வேலையைச் செய்ய அவர்கள் தகுதியுடையவர்கள் என்று மருத்துவர் சான்றளித்திருக்க வேண்டும். உரிய வயது அடையும்வரை ஒருவரையும் கட்டாயம் செய்து வேலை செய்யவைப்பதற்குச் சட்டம் இடமளிப்பதில்லை. குழந்தைத்தொழிலாளரைக் குறித்து எல்லா நாட்டினரும் விழிப்புடையவர்கள் ஆவார்கள். நாட்டின் அந்தஸ்து நமது பாரம்பரியத்தில் நிலைநிற்கிறது. ஒவ்வொரு நாட்டிற்கும் அவருடையதான பண்பாடுண்டு. குழந்தைகளை தேவையில்லாமல் வேலை செய்யவைப்பது நமது பாரம்பரியத்திற்கே தீங்கு விளைவிக்கும்.